திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர் : திரு.செ.முருகன் எம்.ஏ.,

ந.க.எண் : 6797/2023/ஊ.வ.1

நாள் : 26.07.2024

பொருள் : பணிவரன்முறை - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை - திண்டுக்கல் மாவட்டம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV - (தேர்வு நாள்: 24.07.2022- இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட தேர்வாளர்களுக்கு பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது - இளநிலை உதவியாளர் திரு.ம.பூபதி என்பவருக்கு பணிவரன்முறை செய்து ஆணையிடுதல்

பார்வை :
1) செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை. கடித எண்:1845/PSD-D1/2023, நாள்: 25.08.2023.
2) திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6797/2023/ஊ.வ.1 நாள்.29.09.2023.
3) திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்:6797/2023/ஊ.வ.1 நாள்:03.01.2024
4) சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்:92/2024/தி.அ நாள்:29.06.2024

**********

**ஆணை:**

திண்டுக்கல் மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு, குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ம.பூபதி என்பவர் பழங்குடியினர் இடஒதுக்கீடு அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ளார். மாநில அளவிலான கூர்ந்தாய்வு குழுவின் மூலம் (State Level Scrutiny Committee) இனம் குறித்து இவரது இடஒதுக்கீடு தொடர்பாக உண்மைத் தன்மை அறிக்கை பெறப்பட்டு பின்னரே பணிவரன்முறை செய்யப்பட வேண்டும் என்றும், சான்றிதழ் உண்மையானது அல்ல என்று தெரியவரும் பட்சத்தில் தனியரது பணிநியமனம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இரத்து செய்யப்படும் எனவும் பார்வை 1-ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தனியரின் சாதி சான்றிதழுக்கு மாநில அளவிலான கூர்ந்தாய்வுக் குழுவின் (State Level Scrutiny Committee) சாதி உண்மைத் தன்மை சரிபார்ப்புச் சான்று வழங்க நடவடிக்கை மேற்கொண்டு, சாதி உண்மைத் தன்மை சரிபார்ப்புச் சான்றினை அனுப்பி வைக்க கேட்டு மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலருக்கு பார்வை(3)-இன்படி கடிதம் அனுப்பப்பட்டது.

இந்நிலையில், பார்வை(4)-இல் காணும் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதத்தின்படி, இளநிலை உதவியாளர் திரு.ம.பூபதி என்பவருக்கு வழங்கப்பட்ட இந்து-மலையாளி (ST) பழங்குடியினர் சாதிச்சான்று மெய்த்தன்மை உடையது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தனியர் பணியேற்ற நாளான **30.09.2023 மு.ப** அன்று இளநிலை உதவியாளர் நிலையில் கீழ்காணும் நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

**நிபந்தனை**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி இப்பணிநியமனம் முற்றிலும் தற்காலிகமானது. இந்நியமனம் தொகுதி IV, தேர்வு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளின் இறுதி தீர்ப்பிற்கு உட்பட்டது.

தனியரின் பணிவரன்முறை செய்யப்பட்ட ஆணையின் விவரத்தினை பணிப்பதிவேட்டில் பதிவு செய்வதுடன் மேலே கண்டுள்ள நிபந்தனைகளையும் சேர்த்து பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டுமென குஜிலியம்பாறை வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**மாவட்ட ஆட்சியரின் நேர்முக**
**உதவியாளர் (வளர்ச்சி),**
**திண்டுக்கல்.**

26.7.2024

**பெறுநர் :-**

திரு.ம.பூபதி,
இளநிலை உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
குஜிலியம்பாறை - (உரிய வழிமுறையாக)

**நகல் :-**

1. வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (கி.ஊ),
ஊராட்சி ஒன்றியம்,
குஜிலியம்பாறை.

3. ஊ.வ.1 - இருப்பு கோப்பு.